செ.வெ.எண்52/2017 நாள்:18.09.2017

**சிவகங்கை மாவட்டம் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**





சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொது மக்களிடமிருந்து நேரடியாக மனுக்களைப் பெற்று, மனுக்கள் மீது தீர்வுகாணும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கினார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, விபத்து நிவாரணம் கோருதல், பசுமை வீடு கேட்டல், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை கோருதல், வங்கிக் கடன், மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் கேட்டல், குடும்ப அட்டை கோருதல், இலவச தையல் இயந்திரம் வழங்கக் கேட்டல், ஆக்கிரமிப்பு அகற்ற கேட்டல், பட்டா வழங்கக் கேட்டல், மின் இணைப்பு தொடர்பாக மனுக்கள், அங்கன்வாடி சமையலர் பணி கோருதல் மனுக்கள் மற்றும் இதர மனுக்கள் போன்ற **367** கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள் மற்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது விரைவில் தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

சிவகங்கை மாவட்ட தோட்டக்கலைத்துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் 2017-2018-ன் கீழ் பண்ணை இயந்திரமாக்கல் திட்டத்தின் கீழ் மினி டிராக்டர் மற்றும் பவர்டில்லர் 2 பயனாளிகளுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் 2017-2018-ன் கீழ் ஒரு பயனாளிக்கு சுழற்கலப்பையும், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் உற்பத்தி பெருக்கத் திட்டத்தில் ஒரு பயனாளிக்கு விசை உழுவான்

ஆக மொத்தம் ரூ.7,68,600/- மதிப்பீலான இயந்திரங்களுக்கு ரூ.2,45,000/- மானியத்தில் நலத்திட்டங்களும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் சிவகங்கை மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற 3 மாணவ, மாணவியருக்கு பாடப்புத்தகம், உயர்கல்வி தொடர மற்றும் ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தில் ரூ.45,000/-க்கான காசோலைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.